**அ.வ.எண். 128/2023**

**நாள் – 07.02.2025.**

**4ம் வாதி – பரமசிவம்**

**கட்டளை 10ன் கீழ் பதிவு செய்யும் 4ம்–வாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. 1 முதல் 3 வாதிகள் என் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவர். எனது மற்றொரு சகோதரரான சமுத்திரம் என்பவர் இறந்துவிட்டார் அவரின் வாரிசுகள் தான் 7 முதல் 9 வாதிகள். 5,6 வாதிகள் எனது சித்தப்பா மகன்கள். வழக்கை பற்றிய விவரம் எனக்குத் தெரியும்.

2. சமுத்திரம் முருகன் என்பவருக்கு சர்வே எண்.384 ஏ/2ல் எந்த இடமும் கிரையம் கொடுக்கவில்லை.

3. சர்வே எண்.384 ஏ/2ல் கதிரவன் என்பவருக்கு கீழ்பாதியில் 24 சென்டா 25 சென்டா என அளவு சரியாக தெரியவில்லை. வாதிகளும் நானும் கிரையம் கொடுத்துள்ளோம்.

4. தற்போது தபசில் சொத்து காலியாக உள்ளது, முதலில் உழவு ஓட்டிவந்தோம். பிரச்சனை செய்ததால் தற்போது காலியாக உள்ளது.

5. 1,2 பிரதிவாதிகளின் முன் கிரையதாரர்களான தங்கரத்தினம், மாரியப்பன் என்பவர்கள் எனது பெரியப்பா பழனிச்சாமி பேரன் ஆவார்கள். தங்கரத்தினம் மற்றும் மாரியப்பனுக்கு தபசில் சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி